IJCRT.ORG ISSN : 2320-2882
INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS (IJCRT)
An International Open Access, Peer-reviewed, Refereed Journal

# இராஜேந்திரன் சோழன் சிறுகதைகளில் வடிவம்

நெறியாளர்
முனைவர்.பா.சுப்புலெட்சுமி,
இணைப்பேராசிரியர் & தமிழ்த்துறைத் தலைவர்,(ப.நி)
கலைஞர் கருணாநிதி அரசு கலைக் கல்லூரி,
முதுகலை மற்றும் தமிழாய்வுத்துறை,
திருவண்ணாமலை - 606601

சே.சுமதி,
முனைவர் பட்டஆய்வாளர் (பகுதி நேரம்),
கலைஞர் கருணாநிதி அரசு கலைக் கல்லூரி,
முதுகலை மற்றும் தமிழாய்வுத்துறை,
திருவண்ணாமலை - 606601
கைபேசி – 9345273790
மின்னஞ்சல் - tamil260622013@gmail.com

**முன்னுரை :**

ஓர் இலக்கியப் படைப்பின் வெற்றி என்பது, அந்த இலக்கியத்தின் வடிவமைப்பாகும். அந்த வடிவத்தில் கதையின் கருத்துக்கள் நிற்க வேண்டும். அதுவே சிறந்த வடிவமைப்பின் நிலையினைப் பெறுகிறது. கதையின் அடிப்படைக்கூறுகள் அவ்விலக்கியப் படைப்பினை கட்டமைத்து தருகின்றன. அப்படைப்பிற்கு சுவையினையும் அழகினையும் தருகின்றன. கட்டமைப்பின் கூறுகள் ஒரு நல்ல இலக்கியப் படைப்பினைத் தோற்றுவிக்கின்றன.

**வடிவம் :**

ஓர் இலக்கியப் படைப்பு சிறப்பான கருத்துக்களை வெளிப்படுத்த வேண்டுமாயின், அதற்கேற்ப சிறந்த வடிவத்தைப் பெற்றிருக்க வேண்டும். வடிவம் என்பது ஒருவர் உள்ளத்திலிருந்து மற்றவர் உள்ளத்திற்குக் கருத்தையும் உணர்ச்சியையும் உணர்த்துவதற்குரிய ஆற்றல் அல்லது வாயிலாக அமைவதாகும். வடிவம், உருவம், அமைப்பு, கட்டமைப்பு ஆகிய நான்கு சொற்களும், ஒரே பொருள் தருபவையாகக் காணப்பட்டபோதும், இச்சொற்களும் பயன்படுகிற இடத்தை பொறுத்து மாறுபடுகிறது.

**மனிதர்களின் எண்ணங்கள் :**

சமூகத்தில் மனிதர்கள் அனைவருக்கும் எண்ணங்கள் ஒன்று போல் அமைவதில்லை **“சிலருக்குத் தம் புலன் இன்பத்தையே பெரிதாகக் கருதும் எண்ணமே நிலைத்து நிற்கிறது. மனம் பிரிந்த நிலையில் தனக்கும் பிறருக்கும் துன்பம் விளைவிக்கின்ற தீய எண்ணங்களே”** தோன்றுகிறன, பேராசை, சினம், கடும்பற்று, முறையற்றபால் வளர்ச்சி, உயர்வுதாழ்வு மனப்பான்மை, வஞ்சம் போன்ற தீயகுணங்களாக மாற்றம் பெறுகிறது. மேலும் எண்ணம் தனது சிறப்பு உணர்ந்து உயர்வு பெறும்போது மணம், நெறி, நிறை உணர்வு, மன்னிப்பு, என்ற நற்குணங்களாக மிளிர்கிறது என்று வாழ்வியல் கருத்துக்கள் குறிப்பிடுகிறது.

'வயதான கிழவர் ஒருவர் சாலையோரமாக சென்று கொண்டிருக்கும் போது எதிர் அந்த கிழவருக்கு சிறிது காயம் ஏற்பட்ட அந்த விபத்தை பார்த்தவர்கள் சுற்றி இருந்தவர்கள் அவரிடம் வந்து பார்த்துவரக்கூடாதா குடும்பத்துடன் ஸ்கூட்டரில் வந்தவர் அந்த கிழவரை இடித்து விபத்துக்குள்ளாக்குகிறார் அதில் விபத்துக்குள்ளாக்கியவரை பலவாறு கேள்விகளை கேட்டப்பின் அடிப்பட்ட கிழவருக்கு உதவி செய்வது போல உறவுகள் பெயர்களை சொல்லிக் கொண்டு ஸ்கூட்டரில் வந்தவரின் அடிபட்டதை காட்டி

பணம் கேட்டு சண்டை இடுகின்றனர் அதனால் ஸ்கூட்டரில் வந்தவன் பயந்துபோய் தப்பித்தால் போதும் என்று நினைத்து அவர்களின் வாக்குவாதத்திற்கு பிறகு முப்பது ரூபாய் பணத்தை கொடுத்துவிட்டு செல்கிறார் பிறகு அந்த பணத்தைக் கொண்டு முதியவருக்கு உதவி செய்யாமல் தங்களுக்குள் பங்கிட்டு கொள்கின்றனர்.'[1] இக்கதையில் மனிதர்கள் பாதிக்கப்பட்டவர்களின் நிலை என்ன என்பதை அறியாமல் சுயநலமாக இருப்பதை காணமுடிகிறது.

**அதிகார நிலை :**

'மன்னார் சாமி என்ற கிராமத்தான் தன் மகனின் வேலைக்காக மதராஸ் வந்து மந்திரி இடம் சிபாரிசுக்காக வருகிறான் வந்தவன் வயிற்று உபாதை காரணமாக ஒதுங்குவதற்கு ஒரு இடம் கூட இல்லாமல் கவலை அடையும் சூழ்நிலையில் எதிரே வந்த ஒரு ஆளிடம் இங்கு ஒதுங்குவதற்கு இடம் இருக்கிறதா என்று கேட்க அவனோ ஒரு ஓடை அருகே உள்ள முட்புதற் செடியை காண்பித்து செல்கிறான் அவரும் அங்கு செல்ல அப்பொழுது ஒரு போலீஸ்காரன் வந்து அவனை இங்கு கக்கூஸ் போன குற்றத்திற்காக அவன் மீது புகார் சுமத்தி அழைத்து செல்கின்றனர் அப்பொழுது அவன் தன் மகனின் நிலை குறித்து கவலைப்பட்டு போலீஸ்காரிடம் மகனுக்கு தகவல் கொடுக்குமாறு கூறுகிறான். ஆனால் அது அவர்களால் மறுக்கப்படுகிறது அவனைப் போலவே குற்றம் சுமத்தி அவனுடன் அழைத்து செல்லும் சில மனிதர்களின் ஒருவன் ஜனங்களுக்குப் போதுமான வசதி பண்ணிகொடுத்துட்டு அப்புறம் அவங்க தப்பு செஞ்சா அப்ப கேக்கணும் அதுதான் நியாயம். என்னைக்காவது ஒருநாளைக்கு இவனுங்க வரவேண்டியது ஆட்டவரைக்கும் புடிச்சிகாட்டணுமாம் அதான். தனம் பிடிக்க ஆரம்பித்தானா போலீஸ் ஸ்டேஷன் பூரா கக்குசாத்தான் ஆக்கணும் முதல்ல என்ன விட்டா போய் இருந்துட்டு வந்துடலாமே நல்லாசொன்ன இனிமே கக்கூஸ் வந்தா போலீஸ் ஸ்டேஷன்ல தான் வந்து சொல்லணும் எங்க போறது ஒரு இடம் காட்டுங்கன்னு வேற என்ன பண்றது அங்க போனாதான் புடிச்சுபோட்டு விடுவானுங்கன்னு வந்துட்டாங்களே.

பாருங்க இங்கசுற்று வட்டாரத்தில் பொது கக்கூஸ் கழிப்பறை கிடையாது இருக்கிறது அந்த ஒரு இடம் தான் வேற எங்கதான் போறதாம் என்கிறான் ஒருவன் மற்றொருவனோ அங்கபோனா எந்த தப்பில்ல இருக்கிற அந்த மந்திரிங்க பங்களா உள்ளம் கவுல் அடிக்குதாம் அதுகோசரம் புடிச்சான்டு போடுறாங்களாம் அவங்கபோறதுக்கு சௌகரியமா இடம் இருக்கு இல்ல மத்தவங்க பத்தி அவங்களுக்கு என்ன கவலை பின்னர் அப்படித்தான் போவனுங்க'[2] என்று பேசும்போது இன்று நம் நாட்டில் அரசியல்வாதிகள் மக்களுக்கு செய்ய வேண்டிய அடிப்படை வசதிகளை சரிவர செய்துகொடுக்காமல் ஏமாற்றும் நிலையும் மக்களுக்கு பாதுகாப்பாக இருக்கவேண்டிய போலீஸ் அதிகாரிகளோ தங்களுக்கு எந்த கேசும் கிடைக்கவில்லை என்பதற்காக மன்னார் சாமி போன்ற கிராமத்து அப்பாவி ஜனங்களை பிடித்து சென்று பணம் வசூலிக்கும் நிலையை காணமுடிகிறது.

**உழைப்பாளர்களின் நிலை :**

**'காசுக்காக அல்ல'** என்ற கதையில் நகரத்தில் வாகனப் பெருக்கம் அதிகரித்ததால் ரிக்ஷாகாரரின் வாழ்வாதாரம் குறைந்து கொண்டு வருவதையும் அத்தகைய மனிதர்களிடம் இருக்கும் நல்லகுணங்களையும் மாணிக்கம் என்ற கதாபாத்திரம் மூலம் படைத்துள்ளார் இராஜேந்திரசோழன்.

"பஸ் ஸ்டாண்டில் சவாரிக்காக எதிர்பார்த்துக் கொண்டிருந்தான் மாணிக்கத்திடம் அப்பொழுது ஒருவர் வந்து கீரப்பாளையம் போகணும் என்று கூறுகிறார் அவனுக்கு மாணிக்கமோ முக்கால் ரூபாய் என்று கூற அவரோ இவனிடம் எட்டணாதான் தருவேன் என்று கூறி அருகில் இருந்த மற்ற ரிக்சாக்காரன் சவாரி கிடைப்பதே பெரும்பாடாக இருக்கிறது என்று கூறி எட்டணாவிலிருந்து பத்தணாவுக்கு குறைத்து விடுகிறான் இதனால் மாணிக்கம் முனங்கிக்கொண்டே சவாரியே பத்தணாவிற்கு ஏற்றி செல்கிறான். சவாரிய இறக்கிவிட்டு வரும் போது ரிக்ஷாக்காரன் தூபம் பசங்க எங்கேயோ கெடந்து வந்து கோரிமேட்டுல இந்த

ஆஸ்பத்திரிகட்டினாலும் கட்டினாங்க ரிக்ஷாக்காரன் பொழப்பு மன்னாபோடுது ஆஸ்பத்திரி கட்டினானோ இல்லையோ கண்டவை எல்லாம் டெப்போ கொண்டாந்து உட்டுட்டான் அப்புறம் சைக்கிள் ரிக்ஷாவுல எவன் ஏறுறாங்க முப்பது பைசாவுக்கு எங்கு பார்த்தாலும் கொண்டுபோய் விட்டுவிடுகிறான் பத்தாது டவுன் பஸ் வேற என்ற புலம்பும்போது”[3] நகரத்தில் வாகன பெருக்கத்தால் ரிக்ஷாக்காரர்களுக்கு கவலைக்கிடமான நிலையை உருவாகியுள்ளது என்பதை காண முடிகிறது.

**சுயநலம் :**

கடை நெருக்கம் புதுசாய் மின்கம்பம் நடும்போது அங்கு மின்வாரியத்தை சார்ந்தவர்கள் குழி தோன்றும் போது ஒருவிநாயகர் சிலை ஒன்றினை கண்டு எடுக்கின்றனர். அதே விநாயகர் சிலை வேலைக்கு இடைஞ்சலாக இருக்காமல் அதை ஓரமாக வைத்துவிட்டு சென்று விடுகின்றனர். அந்த சிலையை அங்கிருந்து யாரும் அகற்றாமல் அவரவர் வந்து வணங்கிவிட்டு சென்றனர். ஒரு விவசாயி வண்டி செல்வதற்கு இடைஞ்சலாக இருந்ததால் அதை ஓரமாக அகற்றிவிட்டு செல்கிறான். அப்பகுதி முக்கியஸ்தர்கள் வரவுசிலையை ஒரு இடத்தில் வைத்து அதற்கு மூன்று வேலையும் பூஜை ஏற்பாடு செய்கின்றனர் அந்த விநாயகருக்கு இக்கட்டைகலையும் முக்கூட்டு விநாயகர் என்று பெயர் வைத்தனர். அதற்கு ஒரு உண்டியலும் வைக்கப்பட்டது அவ்விடத்தில் வியாபாரம் செய்யும் அப்பாசாமி என்பவனுக்கு அது இடைஞ்சலாக இருந்தது, அவன் கடைக்குவரும் சேரி ஜனங்களும் ஊர் ஜனங்களும், மிகக் குறைவாகவே வந்தனர். பக்கத்துகடைக்கு ஜனங்கள் அதிகமாக செல்வதை கண்டு தனது வியாபாரத்திற்கு தடையாக விநாயகர் சிலை தான் காரணமாக இருக்கிறது என்று கருதியாருக்கும் தெரியாமல் அருகில் உள்ள பார்ப்பன் ஷாப் பக்கத்தில் வைத்துவிட்டு போகிறான் பெரும்பாலான பண்டிதரும் தினமும் கடையை திறக்க வரும்போது விநாயகர் வந்ததால் தனக்கு ஏதோ பெரிய சுபிட்சம் வரப்போகிறது என்று நினைத்து வணங்கிவிட்டு செல்வான். சில நாட்கள் அவன் மனைவி இறந்துவிடவே அவனும் தன் வாழ்வில் நடக்கும் கஷ்டங்களுக்கெல்லாம் காரணத்தை எண்ணியோசிக்கிறான் பிறகு தெளிவு பெற்றான் போல் வெளியில் வந்ததும் விநாயகர் சிலைபார்க்கிறான். அனைத்தும் சிலையால் தான் வந்தது என்று கருதி அங்கிருந்து அருகில் உள்ள ஒரு முஸ்லிம் சாய் புக்காரர் கடைக்கு அருகில் வைத்துவிட்டு செல்கிறான். இதைக்கண்டசாய் புக்குசிரிப்புதான் வந்தது எல்லோருக்கும் மத்தியில் இதை துணிச்சலோடுதான் கடை எதிரே வைத்திருக்க வேண்டுமே வேறு எங்கு அப்புறப்படுத்தக்கூடாது சூடு பிடித்துவரும் வியாபாரத்தை நன்றாக பெருக்கி ஓஹோ என்று வாழ்ந்து எல்லா பசங்களுக்கும் இதனால் எந்த தொந்தரவும் இல்லை என்பதை அவர்களுக்கு உணரவைக்க வேண்டும் என்று சபதம் எடுத்துக் கொள்கிறான். ஆனால் அது நான்காம் நாள் பாய்க்கு ஒரு நோட்டீஸ் வருகிறது. சாலையை அகலப்படுத்தப் போகிறார்களாம் சொந்தமண் அல்லாத ஹைவேயில் ஆக்கிரமித்து இருக்கும் தலைநீட்டி இருக்கும் அல்லது குடி கொண்டிருக்கும் கடைகளை நோட்டீஸ் கண்ட பத்துதினங்களுக்குள் பிரித்துவிட வேண்டும். தவறினால் சட்டப்படிக்கு நடவடிக்கை எடுக்கும் கடைகள் அப்புறப்படுத்தப்படுவது தான் பொருள்கள் பரிமுதல் செய்யப்படும் என்ற நோட்டீஸ் கண்டதும் மிகுந்த யோசனைக்கு பின் அவரும் தன் மைந்தர்கள் மூலம் அதை அங்கிருந்து அகற்றி சாலையில் ஒரு ஓரமாகவே வைத்துவிட்டு செல்கின்றனர்”[4]

முதலில் நன்மையாக இருந்த சிலை பின்பு அதுவே இடையூறாக இருக்கிறது என்று கருதி சிலை அங்கு இருப்பவர்களால் பல இடங்களுக்கு மாற்றப்படுகிறது இப்படி மனிதர்கள் கடவுள்கள் தனக்கு நன்மை நடந்தால் அதை ஏற்றுக் கொள்கின்றனர் அதுவே அவர்களுக்கு தீமை நடந்தால் துன்பம் நேர்ந்தால் அதுவும் கடவுளாகத்தான் என்று நினைத்து சுயநலமாகவே தங்களது தேவைகளை பூர்த்தி செய்கிறார்களே தவிர சமூக அக்கறையோடு யாரும் செயல்படுவதில்லை என்று சில மக்களின் சுயநல போக்கினையும் மனிதர்களின் மூடநம்பிக்கையையும் கடைக்காரர்கள் பண்டிதகடைக்காரர் சயபு போன்ற கதாபாத்திரங்கள் மூலம் பயன்கள் என்னும் கதையில் வெளிப்படுத்துகிறார்.

**அநீதிகள் :**

கிராமமே நமது நாட்டின் வாழ்வாதாரம் ஆகும் அங்கு வசிக்கும் மக்கள் மிகவும் பண்பாளர்களாகவும் பாசம் மிகுந்தவர்கள் ஆகவும் வெகுளித்தனமானவர்களாகவும் நேர்மையானவர்களாகவும் இருக்கக் கூடியவர்கள் அப்படிப்பட்ட கிராமியவாசிகளை பணம் படைத்த மனிதர்கள் ஏமாற்றியும் அடிமைப்படுத்தியும் வந்த சூழலை நீதி என்னும் கதை மூலம் காட்டுகிறார்.

இயற்கை சீரழிவினால் ஏற்பட்ட பாதிப்புகளுக்கு அரசிடம் இருந்து வந்த உதவிப் பணத்தை அவ்வூர் தலைவர்கள் மூலமாக கிராமமக்களுக்கு வழங்கப்படுகிறது. ஆனால் அப்பணத்தை அவ்வூர் தலைவர்களோ மக்களுக்கு முழுமையாக கொடுக்காமல் ஒரு சிறுபகுதியை மட்டும் கொடுத்து ஏமாற்றுகின்றனர். இதை அவர் வசிக்கும் நாராயணன் என்னும் இளைஞன் தட்டி கேட்கிறான் அதை அவமானமாக கருதி ஆவூர் தலைவன் தனது அடி ஆட்கள் மூலம் அவனை அடித்து கொன்றுவிடுகிறான் இப்படி கிராமத்து தலைவர்களாகவே இருப்பவர்கள் தங்களது அதிகாரத்தை பயன்படுத்தி கிராமமக்களுக்கு அரசுகொடுக்கும் சலுகைகளை கொடுக்காமல் ஏமாற்றும் வஞ்சகத்தை இக்கதையில் மூலமாக வெளிப்படுத்தி உள்ளனர். இப்படி கிராமத்தில் நடக்கும் அநியாயங்களால் அப்பாவி மக்கள்கள் படும் ஏமாற்றங்களையும் கொடுமைகளையும் இக்கதைகளின் மூலம் வெளிப்படுத்தி இருப்பது ஆசிரியரின் சமூக அக்கறையை பிரதிபலிக்கிறது.

**அன்பு :**

அன்பு ஒரு மனிதனை நல்வழிப்படுத்துவதோடு மட்டுமில்லாமல் இச்சமுதாயத்தில் உயர்ந்த மனிதனாகவும் மாற்றக்கூடிய வலிமை உடையது. அத்தகைய அன்பான துரத்த சொந்த பந்தங்களால் உறவுகளால் மட்டுமே வரக்கூடியது அல்ல உறவே இல்லாத மனிதர்களிடம் உறவுகொண்டு இருப்பதும் உண்மையான அன்பாகும். அத்தகைய அன்பின் வெளிப்பாட்டினை சூழல் காற்றும் சருகுகளும் எனும் கதையின் வழி வெளிப்படுத்தி உள்ளார்.

**பெண்கள் நிலை :**

ஒரு படைப்பாளன் இச்சமுதாயத்தில் பார்க்கும் அவலங்களையும் மனிதர்களின் வாழ்க்கை சூழல்களையும் தன் கதைகளின் மூலம் எடுத்துக்காட்டிதன் கருத்தை பதிவுசெய்வான் அதன் மூலம் அவனுக்கு பாராட்டுகளும் புகழும் உண்டாவதோடு பல நேரங்களில் எதிர்ப்புகளும் உண்டாகுகின்றன. வாழும் வாழ்க்கையில் உள்ள வலி மற்றும் துன்பங்கள் தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்வதில் உள்ள பிரச்சனைகள் இவற்றில் சிக்கிக்கொண்ட மனித உறவுகள் பற்றிய கதைகளை ராஜேந்திரசோழன் தன் கதைகளில் பதிவு செய்துள்ளார் மேலும் கிராமத்து சூழலில் வாழ்கின்ற பெண்கள் நகரத்து சூழலில் கண்ட பெண்கள் விலைமாதர்கள் பற்றிய வாழ்க்கை சூழல் இவற்றைதன் படைப்புகளில் பதிவு செய்துள்ளார்.

நம் சமுதாயத்தில் ஆண் மேலாதிக்கத்தில் வழிவழியாய் வந்த பண்பாட்டின் அடிப்படையில் பெண்கள் தனித்துவம் பெறாமல் வாழ்ந்து கொண்டு வருகிறார்கள் பாலியல் தேவைக்கு பயன்படும் பொருளாகவே ஆண்கள் மத்தியில் பெண் தள்ளப்படுகிறாள் ஆண்களைச் சார்ந்த அவர்களின் நலன் பேணப்படுகிறது. என்பதை பெண்ணியவாதிகள் கூறுவதை நாம் அறிகிறோம் ஆனால் பெண்ணானவள் திருமணத்திற்கு பின் தங்களுடைய வாழ்க்கையில் எவ்வளவு கஷ்டங்கள் வந்தாலும் அதை எதிர்த்துப் போராடுகிறாள் பெண்களுக்கு இழைக்கப்படும் கொடுமைகளை பெண் எழுத்தாளர்கள் கூறியதைவிட ஆண் எழுத்தாளர்களே அதிகமாக பெண்கள் பெண்களுக்காக குரல் கொடுத்துள்ளனர் அந்த வகையில் ராஜேந்திரசோழன் கட்சியில் இருந்து கொண்டு கட்சியின் முரண்பட்ட செயல்களை எதிர்த்து கூறுபவர் ஆகவும் மக்களுக்கு இழைக்கப்படும் கொடுமைகளை சுட்டிக் காட்டுபவராகவும் பெண்ணின் இல்லறமாண்பு இக்கால பெண்களிடம் ஆண்களுக்கு துணையாக துன்பங்கள் அத்தனையும் சகித்துக்கொள்ள

கூடியவளாகவும் வாழ்ந்து வருகிறாள் என்பதைதன் படைப்பில் காண்பித்தாலும் அடித்தளத்தில் வாழும் மக்களின் வாழ்க்கை நிலைகளை எடுத்துரைத்தாலும் ஒவ்வொரு ஆணும் தன் மனைவியின் வீட்டிற்குள்ளே அவளது வாழ்வு இருந்து விடாமல் வெளியுலக அனுபவங்களையும் கற்றுக்கொள்ள வேண்டும் என எண்ணக்கூடியவளாக இருக்கிறாள் மனைவியின் நலனின் கொண்டவராகவும் நிகழ்கிறாள் என்பதை தன் படைப்புகளில் காண்பித்துள்ளார்.

**‘வினை’** என்னும் கதையில் தினசரி வீட்டு வேலைகளையும் கணவன் குழந்தைகளை பார்த்துக் கொள்வதிலும் தன் வாழ்நாளை மனைவி செலவிடுகிறாள் அவளுக்கு ஆண்களைப் போல வெளியுலக வாழ்வை தெரிந்து கொள்ளவேண்டும் என நினைக்கும் கணவனின் மன ஓட்ட நிலையை இக்கதையில் பதிவுசெய்துள்ளார்.

**‘தோது’** எனும் கதையின் மூலம் தாயின் கடமையையும் கணவனிடம் தன் மகள் வாழ்வை இழந்ததை எண்ணி வேதனை கொள்ளும் நிலையை இதில் பதிவிட்டுள்ளார்.

“பொன்னம்மா கணவனை இழந்தவள் இவளுக்கு ஆறு ஏழு குழந்தைகள் கணவனை இறந்ததற்கு பிறகு தன் குடும்பத்தை காப்பாற்றுவதற்காக தின்பண்டம், இட்லி வியாபாரத்தை செய்து வருவதாக இவளின் மூத்தமகள் ரேவதி பள்ளிபடிப்பு படித்து முடித்து பக்கத்திலிருந்து திண்டிவனத்தில் டைப் சுருக்கெழுத்து படித்துக் கொண்டுவந்தால் காலையில் செல்பவள் மாலையில் தான் வீடுவருவாள். படிக்கச் சென்ற இடத்தில் பாலு என்ற பணக்கார பையன் இவளை காதலிப்பது போல அவளை ஏமாற்றி விடுகிறான் இதனால் அவள் கர்ப்பம் அடைந்துவிடுகிறாள் இந்த விஷயம் அவளின் தாயான பொன்னம்மாவிற்கு தெரியவர அவள் அந்த இளைஞனிடம் சென்று, ரேவதி எல்லாம் சொன்னா நம்ம வீட்டுக்கு எல்லாம் தெரியுமா என்றால் நீங்கள் என்ன சொல்கிறீர்கள்? சாதுரியமாக கேட்டான் அவன் தம்பி வேணாம் பா வீணா ஒரு பொண்ணோட வாழ்வ கெடுத்துட்ட இனிமே அவ வெளியே தலைகாட்ட முடியாது எங்க மானம் மரியாதை எல்லாம் போடும் அப்புறம் அவளை எவன் வந்து கேட்பான் எங்க வவுத்துல மண்ண அள்ளிபோட்டுடாதப்பா என்றாள் ஆனால் அவனும் நன்கு சுதாரித்துக் கொண்டு நீங்க சொல்வது எனக்கு புரியல என்று கூறிவிடுகிறான் அவனின் வீட்டிற்குச் சென்று பொன்னம்மா தன் மகளுக்காக நியாயம் கேட்கிறாள் அவர்கள் கண்ணீருடன் சபித்து விட்டுவருகிறாள் தன் மகளின் எதிர்காலத்தை கருத்தில் கொண்டு அவளது கர்ப்பத்தை மருந்து கொடுத்துகளைத்து விடுகிறாள்.

தன் மகள் படித்து முடித்தபிறகு தன் குடும்ப கஷ்டம் தீரும் மற்ற பிள்ளைகளை நன்கு ரேவதி கவனித்துக்கொள்வாள் என்று கனவு கோட்டை கட்டிய பொன்னம்மாவிற்கு அது நிறைவாசையாக போனதால் தன் மகளுக்காக மாப்பிள்ளையையும் பார்க்க தொடங்கினாள் தன் மகளை யார் திருமணம் செய்துகொள்வார்கள் என்று எண்ணும் போது தன் கடைக்கு வாடிக்கையாளராக சாப்பிட வரும் பாண்டுரங்கன் என்பவன் பொன்னம்மாவை அக்கா அக்கா என்று அழைப்பான் நற்குணம் உடையவன் தாய் தந்தை என்று யாரும் இல்லாத அனாதை அவன். நன்கு உழைக்க கூடியவன் இவனுக்கு தன் மகளை திருமணம் செய்துகொடுத்தால் அவளை நன்கு பார்த்துக் கொள்வான் என்று நினைத்தால் தன் ஆசையை பக்கத்து வீட்டு தோழிலான சகுந்தலாவிடம் கூறிஅவள் மூலமாகபாண்டுரங்க இடம் கேட்கிறாள்.

இரவெல்லாம் பொன்னம்மாவிற்கு தூக்கம் வரவில்லை கல்யாண கனவுகாணக்கூடாது என்பார்களே சாவுசெய்தி வருமாமே ராத்திரி சகுந்தலா கேட்டிருப்பாளா? அவன் என்ன சொல்லி இருப்பான். இன்னைக்கு யார் மூஞ்சில முடிச்சோம் என்றெல்லாம் பலவாறாக யோசனை ஆழ்ந்தாள் காலையில் சகுந்தலா வராததால் பாண்டுரங்கனிடம் பொன்னம்மாள் கேட்க அவனும் எப்படி தோதுபடும் என்றுதன் மறுப்பை கூறிசெல்கிறான்”.[5]

பெண் என்றால் அழகு பதுமைகளாக அலங்கார பொருட்களாக போதப் பொருட்களாக ஏன் எல்லாவற்றிற்கும் மேலாக உடல் இயலாக மட்டுமே பார்க்கிற ஆண் சமூக பெண்ணின் வாழ்வை சீரழிக்கிறான் அதனால் பாதிக்கப்பட்ட தன் மகளின் எதிர்கால வாழ்வை கருதி நல்ல ஆண் மகனுக்கு திருமணம் செய்து கொடுக்க ஒரு தாய் எவ்வாறு போராடுகிறாள் என்பதை தோது கதையில் அறிய முடிகிறது.

**முடிவுரை :**

சமூகம் என்பது மக்கள் அனைவரும் ஒரு குழுவாக கூட்டமாக தொகுதியாக ஒன்றாக கூடி வாழ்வதாகும் அத்தகைய சமுதாயத்தில் மனிதன் எவ்வாறெல்லாம் வாழ்கிறான் என்பதை ஆசிரியர் பதிவு செய்துள்ளார். நடிப்பில் நாம் காணக்கூடிய சமுதாயப் பிரச்சனைகளை இவருடைய கதைகள் பிரதிபலிக்கின்றன சமுதாயத்தில் மனித நேயம் தழைதுவங்க வேண்டும் அதிகாரத்தால் மக்களை ஏமாற்றுபவர்களின் நிலைமாற வேண்டும் உழைப்பாளர்களுக்கு அவர்களின் உழைப்பிற்கேற்ற பலன் கிடைக்க வேண்டும் என்ற கருத்துக்களை அடிப்படையாக கொண்டு வாழ்வின் உண்மைகளை பல்வேறு சூழலில் சமுதாயத்தின் மீது இலக்கியவாதிகளுக்கு அக்கறை உண்டு என்பதை ஆசிரியர் தன் கதைகள் மூலம் பகுத்துக் காட்டி உள்ளார் என்பதை காணமுடிகிறது.

ஓர் இலக்கியத்தின் ஒட்டுமொத்த தொகுப்பையே வடிவம் உருவம் என கூறலாம் கட்டமைப்பு என்ற சொல் சிறுகதைகளில் இடம் பெறும் நிகழ்ச்சிகளை ஒழுங்கும்படி அமைகின்ற முறையே குறிக்கும் சமூக அக்கறை உறவு நிலைகள் பெண்ணிய சிந்தனைகள் உளவியல் பார்வை போன்றவைகளைச் சிறுகதையின் வடிவில் தம் படைப்புகளை கட்டமைந்துள்ளார்.

**அடிக் குறிப்பு :**

1. இராஜேந்திரசோழன் சிறுகதைகள்.
2. இராஜேந்திரசோழன் சிறுகதைகள் மதராசம் மன்னார்சாமியும் பக் 40-41
3. இராஜேந்திரசோழன் சிறுகதைகள் காசுக்காகஅல்ல பக் 133-134
4. ராஜேந்திரசோழன் சிறுகதைகள் பயன்கள் பக் 395
5. ராஜேந்திரசோழன் சிறுகதைகள் தோது பக் 205